மாலை முரசு

பக்கங்கள் 16

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 10 புதன்கிழமை 27.09.2023 அதிர்வு 58

# மனைவியின் கழுத்தை அறுத்த கணவன் கைது

வாழைச்சேனையில் பயங்கரம்

- எச்.எம்.எம்.பர்ஸான் -

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனையில் மனைவியின் கழுத்தை அறுத்த கணவனைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். 04



# தமிழக மீனவரின் அத்துமீறலை கட்டுப்படுத்தவே முடியவில்லை



## இந்தியாவுக்குச் சென்று பேச்சு நடத்த தமிழ் எம்.பிக்களுக்கு டக்ளஸ் அழைப்பு

- எஸ்.நிதர்ஷன் -

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த கடந்த 20 வருட காலமாக தாம் முயற்சித்து வருகின்ற போதிலும் அதனை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். 04

# நிவாரணத்தில் பாரபட்சம்!

## எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம்



(பொகவந்தலாவ நிருபர்)

உலக உணவுப் பாதுகாப்பு அமைப்பால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள், மோரார் மற்றும் தேரேசிய ஆகிய தோட்டப் பகுதியில் உள்ள மக்களுக்கு கிடைக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று தேரேசியா தோட்டத் தேயிலை தொழிற்சாலை முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. 04

## யாழில் மதுபானசாலைக்கு எதிரான

# சீ.வீ.கே. சிவஞானத்தின் கோரிக்கை நிராகரிப்பு!

- எஸ்.நிதர்ஷன் -



யாழ்ப்பாணத்தில் புதிய மதுபான சாலைகளை அமைக்க அனுமதி வழங்கக் கூடாது என வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் முன்வைத்த கோரிக்கை, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்றது.

அதன்போது, தெல்லிப்பழையில் புதிதாக மதுபான சாலை ஒன்றை அமைக்க முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன எனவும், 04

# சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு பொலிஸ் காவலரண் ஏன் அமைக்கவில்லை?

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலர் கேள்வி

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் நீண்ட காலமாக இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு நாகர்கோவில் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் 04



# வருமான சேகரிப்பில் பற்றாக்குறை நிலை: இலங்கை மீது நாணய நிதியம் கரிசனை

இந்த ஆண்டில் இலங்கை அரசின் வருமான சேகரிப்பில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை குறித்து சர்வதேச நாணய நிதியம் கரிசனை கொண்டுள்ளது.

எனினும் நெருக்கடியால் பாதிக்கப் பட்ட நாட்டுக்கான 2.9 பில்லியன் டொலர் கடன் திட்டத்தை இது தடம் புர ளச் செய்ய வாய்ப்பில்லை என்று வெளி நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஒப்புக்கொள் ளப்பட்ட நான்கு வருட கடன் ஒப்பந்தத் தின் முதல் மறு ஆய்வின் ஒரு பகுதி யாக, சர்வதேச நாணய நிதிய பிரதி நிதிகள், நிதியமைச்சராக இருக்கும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க, மத்திய வங்கி ஆளுநரை சந் தித்தனர்.

இந்த நிலையில் முதல் மதிப்பாய்வை நிறைவேற்றுவதற்குத் தேவையான பெரும்பாலான தேவைகளை இலங்கை பூர்த்தி செய்துள்ளது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றமும் இதில் அடங்கும் என்று இலங்கை அரச அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்

இதற்கிடையில் சர்வதேச நாணய நிதிய குழு, தமது இரண்டு வார பய ணத்தின் முடிவில் இன்று (27) புதன் கிழமை பிற்பகல் கொழும்பில் செய்தியா ளர் மாநாட்டை நடத்தவுள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்பட முடியும்!

**சிக்கல் இல்லை என்கிறார் முன்னாள் எம்.பி. நலிந்த ஜெயதிஸ்ஸ**

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதில் எவ்வித சிக்கலும் கிடையாது என்று தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் டாக்டர் நலிந்த ஜெயதிஸ்ஸ இந்த விடயத்தை தெரிவித் துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்குத் தயங்கப் போவ தில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

மக்களின் ஆணைக்கு மதிப்பளித்துச் சர்வதேச நாணய நிதியத்துடன் கொடுக் கல் வாங்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மக்களின் ஆணைக்கு உட்பட்ட வகையிலான யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

தற்போதைய அரசு பிரச்சினைக ளுக்கு தீர்வு காண்பதற்குப் பதிலாகச் சர்வதேச நாணய நிதிய யோசனை ளுக்குள் மறைந்து கொண்டு பொருளா தாரப் பிரச்சினைகளை மேலும் காலம் தாழ்த்துவதற்கு முயற்சிக்கிறது என்று மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை அரசு உரிய நேரத்தில் உதவி பெற்றுக் கொள்ள தவறியதனால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்த



னைகளுக்கு அடிபணிந்து செயற்பட நேரிட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.



# இலங்கையில் இந்த ஆண்டில் இதுவரை 16 நில நடுக்கங்கள்!

இலங்கையில் இந்த ஆண்டில் இதுவரையான காலப் பகுதியில் 16 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

அவற்றில் 6 புத்தல மற்றும் அதனை அண்டிய பகுதிக ளில் பதிவாகியுள்ளன என்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் 3 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மொனராகலை – புத்தல பிரதேசத்தில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. ரிக்டர் அளவு கோலில் 2 அலகுகளாகவும் 4 தசமங்களாகவும் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நாட்டில் நிறுவப்பட்டுள்ள நான்கு நில அதிர்வு அள வீடுகளிலும் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

கடந்த காலங்களில் புத்தல மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பல தடவைகள் லேசான நில அதிர்வுகள் பதிவாகியிருந்தன.

# ஜேர்மனி பறந்தார் ஜனாதிபதி



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நான்கு நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று (27) அதிகாலை ஜேர்மன் நோக்கிப் பயணமாகியுள்ளார்.

ஜேர்மனியில் இடம்பெறவுள்ள பேர்லின் உலக மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி உள்ளிட்ட 13 பேர் அடங்கிய குழு புறப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 5.05 அளவில் கட்டார் நோக்கி பயணித்த கட்டார் விமான சேவைக்கு சொந்தமான கியூ. ஆர்.659 ரக விமானத்தில் சென்றுள்ளனர் என்றும் கட்டாரிலிருந்து அவர்கள் ஜேர்மன் நோக்கி செல்லவுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

பேர்லின் உலக மாநாடு என்பது ஒரு புதிய சர்வதேச மன்றமாகும். இது உலக தலைவர்களை ஒன்றிணைத்து வணிகம் மற்றும் கொள்கையிலிருந்து உலகளாவிய பொருளாதாரத்துக்கான கூட்டுத் தீர்வுகளைக் கண்டறி வதாகும் .

ஆரம்ப உச்சிமாநாடு நாளை தொடக்கம் இரண்டு நாள்களுக்கு பேர்லினில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொது சபைக் கூட்டத்தில் பங்கேற் பதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்க கடந்த 24ஆம் திகதி மீண்டும் நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் இருந்து வந்தவர்கள் மீது மட்டக்களப்பில் தாக்குதல் சம்பவம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 150 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நிகழ்வுகளுக்காக கனடாவில் இருந்து வருகை தந்திருந்த இருவர் மீது மட்டக்களப்பில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

புனித மிக்கேல் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரே இவ்வாறு தாக்குதலுக்கு உளளாகினர் என்று தெரியவருகின்றது.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 150 வருடத்தை நிறைவுசெய்யும் முகமாக பல நிகழ்ச்சிகள் மட்டக்களப்பில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் கனடா நாட்டில் இருந்து வந்தவர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தாக்குதலுக்கு உள்ளான ஒருவரைத் தொடர்புகொண்டபோது, தன்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யவுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். கனடா தூதரகத்திலும் இது தொடர்பில் முறையிடவுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாண தென்மோடி கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி

## ஆர்வலர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மரபுவழி ஆற்றுகையாளரை ஊக்கப்படுத்தவும் நலிந்து செல்லும் கூத்துமரபுக்கு புத்துயிர் கொடுக்கும் நோக்குடன் 'யாழ்ப்பாண தென்மோடி கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி' அடுத்த மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் முதலாம், இரண்டாம் பிரிவுகள் பாடசாலை மாணவர்களுக்காகவும், மூன்றாம் பிரிவு திறந்த போட்டியாகவும் அமையவுள்ளது.

இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

முதலாம் பிரிவில் தரம் 6 தொடக்கம் 9 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே 10000, 7000 , 5000 ரூபா வீதம் வழங்கப்படும்.

இரண்டாம் பிரிவில் தரம் 10 தொடக்கம் 13 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே 12000, 7000, 5000 ரூபா வீதம் வழங்கப்படும்.

மூன்றாம் பிரிவு திறந்த போட்டியாக நடைபெறும். இதில் 20 வயது தொடக்கம் 35 வயது வரையிலான ஏனையவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே 20000, 15000, 10000 ரூபா வீதம் வழங்கப்படும்.

ஒருவரே தனி ஆற்றுகையாளராகப் பங்கேற்கும் இப்போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்ற முடியும்.

போட்டியாளர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவத்தை 05.10.2023 வியாழக்கிழமைக்கு முன்பாக, 'யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி' எனக் குறிப்பிட்டு திருமறைக் கலாமன்றம் , இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம்.

இவைதவிர 077 4028031, 077 6692657 என்னும் தொலைபேசி இலக்கங்களுக்கு வட்ஸ் அப் மூலமாகவும் அனுப்பி வைக்கலாம்.



# பாலமுனையில் இரத்ததான முகாம்

(எம்.ஏ.ஏ.அக்தர்)

பாலமுனை நஷனல் விளையாட்டுக் கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான முகாமொன்று பாலமுனை அலிகார் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு வழங்குவதற்காக இந்த இந்த இரத்தான முகாம் நடைபெற்றது.

பாலமுனை நஷனல் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எம்.ஏ முரீத் தலைமையில் நடைபெற்ற இந்த இரத்தான முகாம் நிகழ்வில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் திருமதி அலீமா அப்துர் ரஹ்மான் உட்பட தாதியர்கள், ஊழியர்கள், காத்தான்குடி ஆதார வைத்தியசாலை குருதி நன்கொடையாளர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், பாலமுனை நஷனல் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இ.போ.ச. பஸ் சாரதியை கடத்திய ஐவர் சிக்கினர்

## மேலுமொரு சந்தேகநபரைத் தேடி வேட்டை

- கம்பளை நிருபர் -

இ.போ.ச. பஸ் சாரதி மீது கத்திக் குத்து தாக்குதல் நடத்திவிட்டு அவரை வானில் கடத்திச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணொருவர் உட்பட ஐவர் கொழும்பில் வைத்து கம்பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொத்மலை, கடதொர பிரதேசத்தைச் சேர்ந்த இ.போ.ச. பஸ் சாரதியான ஹேமந்த ராஜபக்ச, கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இ.போ.ச. பஸ்ஸில் பயணியாக வந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கம்பளை, ரிவர் சைட் பகுதியில் வைத்து நால்வர் குறித்த பஸ்ஸில் ஏறியுள்ளனர்.

பின்னர் அவர் மீது கத்திக் குத்து தாக்குதல் நடத்தி, அவரைக் கம்பளை, ஜயமாலபுர பகுதியில் வைத்து வானொன்றில் கடத்திச் சென்றனர்.

இந்நிலையில் அன்றைய தினம் இரவே, ஒருகொடவத்தை பிரதேசத்தில் வைத்து கடத்தல்காரர்களிடமிருந்து தப்பி வந்த சாரதி, கம்பளை பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தார். பின்னர் சிகிச்சைக்காகக் கம்பளை வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த கம்பளை பொலிஸார் சந்தேகநபர்கள் 6 பேரில் ஐந்து பேரை கொழும்பில் வைத்து கைது செய்துள்ளதுடன், பழமையான வாள் ஒன்றையும், கடத்தலுக்குப் பயன்படுத்திய வானையும் கைப்பற்றியுள்ளனர். தொல்பொருள்



பெறுமதிமிக்கதாகக் கூறப்படும் அந்த வாளுக்காகவே சாரதி கடத்தப்பட்டு, தாக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கம்பளை பொலிஸார் தொடர்ந்தும் சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும், தலைமறைவாகியுள்ள மற்றைய சந்தேகநபரைக் கைது செய்யவும் கம்பளை பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### மனைவியின் கழுத்தை...

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – 1, அல் முக்தார் வீதியில் இந்தச் சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

கணவன், மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மனைவியைக் குளியலறையில் வைத்து கணவன் கத்தியால் கழுத்தையும், கையையும் வெட்டியபோது பலத்த காயங்களுக்குள்ளான மனைவி தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கூக்குரலிட்ட போது அயலவர்கள் சென்று அவரைக் காப்பாற்றி மீட்டுள்ளனர்.

57 வயது மதிக்கத்தக்க குறித்த பெண் பலத்த காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தாக்குதல் நடத்திய கணவன் வாழைச்சேனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### தமிழக மீனவரின்...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டைக் கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போதிலும், அவர்களைக் கைது செய்யும் செயற்பாட்டில் கடற்படையினர் தயக்கம் காட்டுகின்றனர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தக் கடந்த 20 வருட காலமாக நான் முயற்சித்து வருகின்றேன். இந்த அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல பேச்சுகளிலும் நான் கலந்துகொண்டேன். ஆனால், அந்தப் பேச்சுகளில் எந்தச் சாதகமான முடிவும் எட்டப்படவில்லை.

தற்போது ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கின்றேன். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இந்தியா சென்று இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி உண்மையான நிலைமையை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும் எனத் தீர்மானித்துள்ளேன். அதற்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றேன்.

அதன்மூலம் இதற்கு ஒரு சாதகமான முடிவை எடுக்க முடியும். எல்லை தாண்டும் பிரச்சினை, இலங்கையில் மாத்திரமல்ல, இது ஏனைய உலக நாடுகளிலும் காணப்படுகின்றது. இரு நாடுகளின் பிரச்சினையை இரு நாடுகளுடனான பேச்சு மூலமே தீர்க்க முடியும்." – என்றார்.

### சீ.வீ.கே. சிவஞானத்தின்...

அதற்குப் பொதுமக்கள் எதிர்ப்புக் காட்டி வருகின்றனர் எனவும் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதன்போது, அவைத் தலைவர் யாழ்ப்பாணத்தில் புதிதாக எந்த மதுபான சாலைக்கும் அனுமதி வழங்கக் கூடாது என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுமாறு கோரிக்கை வைத்தார்.

நியதிகளின் அடிப்படையில், யாழ்ப்பாணத்தில், கள்ளுத் தவறணைகள் உட்பட 146 மதுபான சாலைகளுக்கான அனுமதிகளை வழங்க முடியும். எனவே, யாழ்ப்பாணத்தில் எத்தனை உள்ளது என பரிசீலித்த பின்னரே புதியதற்கு அனுமதி வழங்க முடியுமா? இல்லையா? எனத் தீர்மானிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து சீ.வீ.கே. சிவஞானத்தின் கோரிக்கை கூட்டத்தில் தீர்மானமாக எடுத்துக்கொள்ளப்படவில்லை.

### நிவாரணத்தில்...

"விதவைகள், ஊனமுற்றோர் இருக்கின்றனர். அவர்களுக்குக்கூட நிவாரணம் வழங்கப்படவில்லை. உலர் உணவு வழங்கும் விடயத்தில் பாரபட்சம் காட்டப்படுகின்றது" – என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேசத் துக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தரைத் தொடர்புகொண்டு வினவியபோது,

"உலர் உணவுப் பொருட்கள் உலக உணவுப் பாதுகாப்புத் திட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது. பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பம், சிறுநீரக நோயாளர்கள் , ஊனமுற்றவர்கள், இருதய நோயாளர்கள் ஆகியோருக்கே இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான பெயர்ப்பட்டியல் தனியார் நிறுவனத்தின் ஊடாக கடந்த 3 மாதங்களுக்கு முன்பு பெறப்பட்டு, உரியவர்களைக் கொழும்புக்கு அழைத்து உறுதிப்படுத்திய பின்னரே உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன." – என்றார்.

### சட்டவிரோத மணல்...

இதுவரை அந்தப் பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று இடம்பெற்றபோது மருதங்கேணி பிரதேச செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நீண்ட காலமாகக் குறித்த பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம்பெற்று வரும் நிலையில் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குடத்தனை, நாகர்கோவில், மணற்காடு ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது.

இதனைத் தடுக்கக் குடத்தனை மற்றும் நாகர்கோவில் பகுதிகளில் பொலிஸ் காவலரண் அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அந்தக் கோரிக்கைக்கு அமைவாகப் பொலிஸார் செயற்படவில்லை." – என்றார்.

இந்த விடயம் தொடர்பில் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர், "இரவு பகலாகத் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. கூட்டங்களில் மாத்திரம் இந்த விடயம் பேசப்படுகின்றதே தவிர எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை" – என்று விசனம் தெரிவித்தார்.



# எழுகை அறிவுப் பகிர்வு திருகோணமலையில்

(ஹஸ்பர் )

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் திருகோணமலை மாவட்டத்தின் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் வாண்மையை விருத்தி செய்யும் நோக் கில் எழுகை அறிவுப் பகிர்வு நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை உப்புவெளியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உயர்கல்வி நிறுவனங்களான தென் கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் திருகோண மலை வளாகம் ஆகியவற்றின் சிரேஷ்ட விரிவுரையாளர்களுடன், கலை இலக்கியத் துறைசார் மூத்த, இளந்துறைசார் ஆளுமைகள் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

# காயத்துடன் வீதியில் கிடந்தவர் வைத்தியசாலையில் அனுமதி!

மன்னார் – உயிலங்குளம் நெடுங் கண்டல் பிரதான வீதியில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் ஆண் ஒருவர் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

மன்னார் – உயிலங்குளம் – நெடுங் கண்டல் பிரதான வீதியில் பலத்த காயங்களுடன் நபர் ஒருவர் நேற்று (26) இரவு மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் அடம்பன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெடுங் கண்டல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மீட்கப்பட்ட நபர் அடம்பன் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கிருந்து உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டுள்ளார்.

பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டவர், அடம்பன் தாம ரைக்குளம் பகுதியை சேர்ந்தவர் என தெரிய வருகிறது .

அவர் விபத்திற்கு உள்ளானாரா? அல்லது தாக்குதல் சம்பவமா? என பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் அடம்பன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலரிப்பால் காவுகொள்ளப்படும் தம்பிலுவில் சமாதி ஆலயம்!

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான கடலரிப்பால் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் காவு கொள்ளப்படும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளது.

அந்த பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பில், இதுவரை சுமார் 200 தென்னை மரங்கள் மற்றும் 12 கிணறுகள் கடலரிப்பால் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த சில நாள்களாக அங்கு இடம் பெறும் மோசமான கடலரிப்பால் தம்பையா சமாதி ஆலயமும் கடலுக்குள் காவு கொள்ளப்படும் அபாயம் நிலமை ஏற்பட்டுள்ளது.



குருகுலப் பணிப்பாளர் கண. இராஜரத்தினம் உடனடியாக பிரதேச செயலாளருக்கும், கடலோர பாதுகாப்பு திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் கே.துளசிதாசனுக்கும் அறிவித்தார் .

மாகாண பணிப்பாளர் எந்திரி கே.துளசிதாசன் உடனடியாக செயல்பட்டு 100 மண் மூடைகளை நேற்றைய தினம் அங்கு அடுக்க உத்தரவிட்டார் .

அதன்படி, அங்கு கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தினரும் குருகுல இல்ல மாணவர்களும் சிவதொண்டர் அணியும் இந்தப் பணியை மேற்கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மனித நேயத்துக்குச் சவால்

மூளைசாலிகள், உழைக்கும் வர்க்கத்தினர், இளைஞர்கள் போன்ற தரப்பினர் சுபீட்சமான எதிர்காலத்தைத் தேடி நாட்டை விட்டு வெளியேறி வருகின்றமையால் ஏற்படும் வெற்றிடம் குறித்து இலங்கை சிந்தித்துக் கொண்டிருக்கையில், இந்த விடயத்தை ஒட்டி புனித பாப்பரசர் பிரான்சிஸ் ஒரு கருத்தை முன் வைத்திருக்கின்றார். அது நோக்கத்தக்கது.

கடந்த வாரம் திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை உள்ள மூன்று நாள்களுக்குள் 199 படகுகளில் சுமார் 8 ஆயிரத்து 500 அகதிகள் மத்திய தரை கடலில், உயிராபத்தான கடற்பயணத்தைத் தாண்டி இத்தாலியின் லம்பெட்ஸூவா தீவில் வந்து இறங்கி இருக்கின்றமை மிகப்பெரிய அகதிகள் படையெடுப்பாகப் பார்க்கப் படுகிறது.

இது, இத்தாலியிலும் அதைச் சூழ்ந்த நாடுகளிலும் பெரும் அகதிகள் சிக்கலாக அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கையில், மத்திய தரைக் கடல் நாடுகளின் கூட்டமைப்பின் மாநாட்டின் பூர்த்தி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பிரான்ஸின் மார்ஸெல்லி நகருக்கு வருகை தந்த புனித பாப்பரசர் பிரான்சிஸ் இந்த விடயத்தை ஒட்டிக் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

மத்திய தரை கடல் நாடுகளின் ஆயர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியிலான ஒன்று கூடலில் பாப்பரசர் உரையாற்றினார். அச்சமயம் பார்வையாளர்கள் வரிசையில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மார்க் கோனும் அமர்ந்திருந்தார்.

குடிபெயர்ந்து வரும் அகதிகளின் பிரச்சினையை விசாலமான சகிப்புத்தன்மையுடன் நோக்கும்படி மத்திய தரைக் கடல் நாடுகளை பாப்பரசர் விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

'உயிரைத் துச்சமாக மதித்து, மரணக் கடலான மத்தியதரைக் கடலைத் தாண்டிப் பயணித்து அவர்கள் வருகின்றார்கள். இவ்வளவு ஆபத்தை எதிர்கொள்ளும் அவர்களின் பயணத்தை வெறுமனே ஒரு படையெடுப்பாக மட்டும் நோக்காதீர்கள்.'- என்று அறிவுறுத்தினார் புனித பாப்பரசர்.

'இது வெறும் அவசர நிலைப் பிரச்சினை அல்ல. அதையும் தாண்டி நமது காலத்தின் யதார்த்தம். மத்தியதரைக் கடலைச் சூழ்ந்து பரந்திருக்கும் மூன்று கண்டங்களையும் ஒட்டிய ஒரு பொதுப் பிரச்சினை. நெருக்கடி. இது விடயத்தில் புத்திசாலித்தனமான தொலைநோக்குப் பார்வையுடன் ஐரோப்பிய பிரதிபலிப்பு அமைய வேண்டும்' என்ற சாரப்பட அவரின் உரை அமைந்தது.

ஐரோப்பியப் பண்பியல்பு தனது கனவான்தன்மையை காட்டுவதாக அமைய வேண்டுமே தவிர, வெறும் கெடுபிடிக் கண்டிப்பாக அது அமையக்கூடாது என்பது அவரின் கருத்தியலாக பிரதிபலித்தது.

வெறித்தனமான அலட்சியப் பண்புகள், அஞ்சாமைப் போக்கு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விடயம் அணுகப்படக் கூடாது. அலைகளுக்கு மத்தியில் நிர்க்கதியாக விடப்பட்டால் மூழ்கி அழிந்து விடக்கூடிய இந்த மக்கள் காப்பாற்றப்பட்டேயாகவேண்டும் என்றும் அவர் கூறினார்.

மனித நேயம், துன்பப்பட்டவர்களை அரவணைத்தல், நெருக்கடி காலத்தில் விரைந்து உதவுதல் போன்ற இயேசுவின் வழிகாட்டல் பண்புகளை புனித பாப்பரசரும் பிரதிபலித்தமை ஆச்சரியமன்று.

ஆனாலும் அகதிகள் படையெடுப்பு சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும் பிராந்தியங்களுக்கும் பல்வேறு விதமான புதிய சிக்கல்களைக் கொண்டுவரப் போகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

உலக மனிதநேயப் பண்பியல்பு ஒரு வரலாற்றுச் சவாலை சந்திக்கும் வேளை இது என்பது மட்டும் உண்மை.





## அன்னலெட்சுமி இராஜதுரையின் சிறுகதை நூல் வெளியீட்டு விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும், லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிட்ட அன்னலெட்சுமி இராஜதுரையின் சிறுகதை நூல் வெளியீட்டு விழா இலங்கை தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் இடம்பெற்றது.

பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாஸிம் உமர், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், ஞானம் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன், த.சிவ சுப்ரமணியம், கலாபூசணம் கே.பொன்னுத்துரை உட்பட இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## அதிபர், ஆசிரியர்களை கௌரவித்த மாணவி

(எம்.ஏ.றமீஸ்)

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைவாக, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் இருந்து பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்குத் தெரிவான லாபீர் பாத்திமா மர்வா என்ற மாணவி, தனக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோரை கௌரவித்துள்ளார்.

இந்த நிகழ்வு கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது, மாணவிக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பாடசாலையின் முகாமைத்துவ சபையினர், பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர் சபூர் ஆதம், மாணவியின் பெற்றோர் எஸ்.எம்.லாபீர் கலந்து கொண்டனர்.



# பாடசாலைக்குள் கசிப்பு விற்ற மாணவனால் அதிர்ச்சி நிலை!

இரத்தினபுரி - கலவானை பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலையின் மாணவன் ஒருவன் பாடசாலைக்குள் கசிப்பு விற்பனை செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவத்தின் போது, மாணவன் பாடசாலையின் ஆசிரியர் ஒருவரால் பிடிக்கப்பட்டுக் கலவானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அந்த மாணவன் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார் என்று கலவானை பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மாணவன் பாடசாலையின் 9 ஆம் தரத்தில் கல்வி கற்பவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விற்பனைக்குக் கொண்டுவரப்படும் கசிப்புகளை குடி தண்ணீர் போத்தலில் எடுத்து வந்துள்ளார்.

அந்தப் பாடசாலையின் உயர்தர மாணவர்களுக்கு அவை விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது என்று கலவானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# வீதிச் சமிக்கைகளை மீறுவதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் பிரதான வீதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி சமிஞ்சைகளை மீறும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இதனால் விபத்துகள் அதிகரிக்கும் நிலைமை காணப்படுகிறது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட முக்கிய சந்திகள் பொது இடங்களுக்கு முன்பாக வீதி சமிஞ்சைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட வீதி சமிஞ்சையை அண்டிய பகுதிகளில் போக்குவரத்து பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டும் கூட பாதசாரிகள் முதல் வாகன சாரதிகள் சைக்கிள்களில் பயணிப்போர் வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறுகின்ற செயற்பாடுகளை காண முடிகின்றது.

இவ்வீதி சமிஞ்சைகள் உரிய செயற்பாட்டில் உள்ள போதிலும் சைக்கிள்களில் பயணிப்போர் நிறுத்தல் சமிஞ்சையில் அவ்விடத்தில் நிற்காது பயணம் செய்வதைக் காண முடிகின்றது. இது தவிர சில மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் கூட வீதி சமிஞ்சை குறியீட்டை மதிக்காமல் நிறுத்தாமல் பயணிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி வீதி சமிஞ்சை குறியீட்டை மீறும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கல்முனை நகர் பகுதிகளில் நாய்களால் பெரும் தொல்லை

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் பிரதான வீதிகளில் பொது மக்கள் நடமாட முடியாத அளவுக்குக் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த வீதியில் அன்றாடம் செல்பவர்களை வீதிகளில் நிற்கும் நாய்கள் துரத்திக் கடிக்க வருகின்றன என்று பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்

நாய்கள் துரத்துவதால் குறிப்பிட்ட வீதியில் பயணம் செய்வோர் விழுந்து காயங்களுக்கு ஆளாகும் நிலைமையும் அதிகரித்துள்ளது.

பிரதான வீதிகளில் இரவு பகல் பாராது மேற்படி கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

நற்பிட்டிமுனை பிரதான வீதி, பாண்டிருப்பு பிரதான வீதி, சாய்ந்தமருது செல்லும் முக்கிய பிரதான வீதிகளில் பகல் இரவு பாராது நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.



இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்திக் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.



# கீழைத்தேச இசையில் மூன்று முதலிடங்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மத்திய மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கீழைத்தேச இசைப் போட்டியில் கண்டி ஸசெக்ஸ் சர்வதேச கல்லூரிக்கு மூன்று முதலிடங்கள் கிடைத்துள்ளன.

புளும் சோலோ நிகழ்வில் மெதுல் ஜயசிங்க, வொகல் சோலோ நிகழ்வில் செனர சிங்கபாலி ஆகியோர் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

குழு இசை நிகழ்வில் முதலாம் இடத்தையும், தப்லா சோலோ நிகழ்வில் சந்தூபா ஜயவர்த்தன இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்ட போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.



# முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள் ஒலுவில் பிரதேசத்தில் புனரமைப்பு

(ஏ.எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டம், ஒலுவில் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகளைப் புனரமைப்பதற்கான விசேட கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (24) சஹிட் ஹாஜி யார் தோட்டத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீமின் பணிப்புரையின் பேரில் அம்பாறை மாவட்டத்தில் கட்சிக் கிளைகளை புனரமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒலுவில் பிரதேசத்தில் 7 கிராம சேவகர் பிரிவுகளிலும் கட்சிக் கிளைகளைப் புனரமைக்கும் செயற்பாடுகள் இதன்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.



இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ. காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளர் ஏ. சி.சமால்தீன், ஒலுவில் பிரதேச அமைப்பாளர் ஏ.எல்.சுபையிர், ஒலுவில் மத்திய குழுவின் தலைவர் ஏ.எல். ஜெமில் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# வடக்கு தமிழ்மொழி தினப்போட்டியில் உடுப்பிட்டி மகளிருக்கு இரு இடங்கள்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழித் தின போட்டியில் வடக்கு மாகாணத்துக்கான போட்டி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் தனி நடனப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி மாதினி ஜெகதீஸ்வரன் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார். பாடசாலை மாணவிகளின் நாட்டிய நாடகம் மூன்றாம் இடத்தைப் பெற்றது.



# தேங்கி நிற்கும் கழிவு நீரால் சுகாதாரக் கேடு; மக்கள் அவதி

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பெரியநீலாவணை இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் தேங்கி நிற்கும் கழிவு நீரால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது. இதனால் அங்கு வாழும் குடியிருப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட 96 குடும்பங் களுக்கு வழங்கப்பட்ட இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் முறையான வடிகான் அமைக்கப்படவில்லை.

இதனால் சமையலறைக் கழிவுநீர், குழியலறைக் கழிவுநீர் மற்றும் மலசல கூட கழிவு நீர் போன்றவை வீட்டுத்திட்டத்தின் பின்புறங்களில் தேங்கி நின்று சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துகிறது.



நுளம்புகளைப் பெருக்கி டேங்கு, மலேரியா போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றது.

இதனால் இந்த வீட்டுத் திட்ட மக்கள் மட்டுமன்றி அதனை அண்டிய குடியிருப்புகள், பாடசாலை, வைத்தியசாலை, பொலிஸ் நிலையம் போன்றவற்றில் உள்ளவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அரசியல்வாதிகள் இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து தருவதாக வாக்குறுதியளித்து செல்கிறார்கள். ஆனால் நாங்கள் இவ்வாறான நெருக்கடியான வாழ்விலிருந்து மீண்டபாடில்லை என்று குடியிருப்பு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

மனவளக்கலை

**sky Yoga**

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும்
**sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள்**
(Sky Yoga Foundation Course )



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
**sky Yoga Center**
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607

# சிறந்த வேளாண்மைவாதிக்கான தங்கப் பதக்கம் சதீஸ்வரனுக்கு!

விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த கருத்தரங்கு (ASDA 2023) கடந்த வாரம் மத்திய மாகாணம் பேராதனை கண்ணொரு வவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடவுப் பொருள்கள் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் சதாட்சரம் சதீஸ்வரன் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வேளாண்மை அபிவிருத்தியில் அவரின் சேவையைக் கௌரவிக்கும் வகையில் விவசாய அமைச்சர் துமிந்த திஸநாயக்கவால் சிறந்த வேளாண்மைவாதிக்கான (Best Agriculturalist) தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த கருத்தரங்குக்கான நிறைவேற்றுக் குழுவால் இந்த கௌரவத்துக்கு சதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.






# இளமையில் கொடியது வறுமை...

வறுமை என்பது, உணவு, உடை, உறைவிடம், பாது காப்பான குடி தண்ணீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப் பெறுதல் போன்றவை உட்பட்ட, வாழ்க் கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழந்த நிலை ஆகும்.

பல நாடுகளில் முக்கியமாக வளர்ந்து வரும் நாடுகளில் வறுமை ஒழிப்பு என்பது ஒரு முக்கியமான இலக்காக இருந்துவருகிறது. இப்படிப் பல வழிகளில் ஏழ்மையை உடைக்க முற்பட்டாலும் உலகளாவிய பட்டினி மதிப்பீட்டில் இலங்கை, வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானைவிட இந்தியா பின்தங்கியுள்ளது.

இருப்பினும் ஓர் ஆறுதலாக உலக வங்கியின் அறிக்கை இந்தியாவில் உள்ள 100 கோடி மக்கள் ஏழ்மை என் னும் பட்டியலிலிருந்து முன்னேறியுள் ளனர் என்று தெரிவித்துள்ளது.

எப்படி இருப்பினும் இன்னும் வறுமை தீர்ந்தபாடில்லை. இளமையில் வறுமை கொடியது. வறுமையின் அருமை இளமையில் அறிந்தால் வாழ்வின் இனிமை முழுமை அடைவதில்லை. காதலில் மட்டும் அல்ல கல்வியிலுதான். கல்லூரியின் வாசல் தொடுவதில்லை. காதல் தேசத்தில் சென்று கவிதை எழு துவதில்லை. காத்திருந்து காலத்தால் காதல் கனிந்தாலும் குடும்ப நிலை அறிந்து கடல் தாண்டா நினைக்கையில், காத்திருந்து வந்த காதலை கை கழுவும் நிலைதான். வானில் பறந்து வேற்று மண்ணில் வசித்து வியர்வை சிந்துகின் றேன் வறுமையை போக்கிட.

இளமை தொலைந்ததே என்று என்னும் போது குடும்ப வறுமை ஒழிந் ததே என்று மனம் மகிழ்கிறேன்.

ஒருவர் நன்றாக எந்த வித கவலையும் இல்லாமல் அனுபவிக்க கூடிய பருவம் இளமைப் பருவமே ஆகும். எனவே அந்த காலத்தில் வாழ்க்கைக்கு இன்றியமையாத பணம் குறைந்த பட்ச அளவு கூட இல்லாமல் வறுமை சூழுமேயானால் அது மிக கொடியதொரு நிகழ்வாகும்.

எல்லாம் வாங்கி வந்த வரம் என்று சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், அது வாங்கி வந்த வரம் அல்ல. நம்மை நாமே தேடிக்கொண்ட வரம்.

ஒரு ஜென்மத்தில் மிகப் பணக்கார ராக இருந்து பாவச் செயல்களையே செய்து கொண்டிருக்கும் செயலின் பதிவுகள், பிறப்பின் சுழற்சி காரணமாக ஏற்பட்ட மறு பிறவியில் அதே பதிவுகளை தாங்கிக்கொண்டு பிறக்கிறது. அடுத்த பிறவியில் அதே பதிவுகள் வறுமையை உணர்த்தும் பொருட்டு மேலோங்கி வாழ்க்கையில் வறுமையை அனுபவிக் கும்படி செய்கிறது.



வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான். உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்து தானே ஆகவேண்டும். எந்த பாவச் செயல்களிலிருந்தும் நாம் தப்பிக்க இயலாது. ஒரு வினைக்கு எதிர்வினை உண்டு. நாம் வீசிய பந்து நம்மை நோக்கியே திரும்ப வரும்.

வறுமைக்கான காரணம், அதன் விளைவுகள், அதனை அளப்பதற்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பான வாதங்கள், வறுமை ஒழிப்பைத் திட்ட மிடுவதிலும், நடைமுறைப் படுத்து வதிலும் தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதனால் இவை, அனைத்துலக வளர்ச்சி, பொது நிர்வாகம் ஆகிய வற்றோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன.

வறுமையால் ஏற்படும் வலி, துன்பம் என்பவை காரணமாக, வறுமை விரும்பத்தகாத ஒன்றாகவே கொள் ளப்படுகின்றது. சமயங்களும், பிற அறநெறிக் கொள்கைகளும் வறு மையை இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றன. எனினும், சில ஆன்மீகச் சூழல்களில் உலகப் பொருள்களைத் துறந்து பொருள்சார் வறுமை நிலையை ஏற்றுக்கொள்ளல் சிறப்பானதாகக் கருதப்படுவதும் உண்டு.

வறுமை தனிப்பட்டவர்களையோ அல்லது குழுக்களையோ பாதிக் கக்கூடும். இது வளர்ந்துவரும் நாடு களில் மட்டுமின்றி வளர்ந்த நாடுக ளிலும், வறுமை வீடின்மை போன்ற பல வகையான சமுதாயப் பிரச்சி னை களுக்குக் காரணமாக அமை கின்றது.

சில்லரையாய்ச் சிரிக்கும்
சின்ன வயது எனக்கு.
ஆடத் துடிக்கும் கால்களை
அடக்கி வைக்கிறது வயிறு
ஓடி விளையாட ஆசைதான்
பாரதி மாமா,
ஆடி அடங்கிய பின்
ஆடத் துவங்கும் வயிற்றுக்கு
வழி தெரியவில்லையே
என்ன செய்ய....

-சயந்தன் அபிசரண்,
ஊடகக் கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.







# திறன் அபிவிருத்தி கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 111 ஆம் வகுப்பு உத்தியோஸ்தர்களை 11 ஆம் வகுப்புக்குத் தரம் உயர்த்து வதற்கான திறன் அபிவிருத்தி கலந்துரையாடல் மீபேயிலுள்ள தேசிய கல்வி நிறுவக கல்வி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கல்வியமைச்சின் செயலாளர், தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம், இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



# கரையோர பாதுகாப்பு சிரமதானம் காரைதீவில்

(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரை யோர பிரதேசத்தை பாதுகாப்பது தொடர்பான சிரமதான நிகழ்வொன்று காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சிரமதான நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மண்முனைப்பற்று பிரதேசத்தின் கடற்கரையில் துப்புரவுப் பணி



(அபு ஷைரீன்)

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகம் சர்வதேச கரையோர பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் நிகழ்வைப் புதுக்குடியிருப்பு கடற்கரைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் ந.சத்தியானந்தி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது புதுக்குடியிருப்பு கடற்கரையோரங்களில் தேங்கிக் காணப்பட்ட ஏராளமான பிளாஸ்டிக் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு வடக்கு மற்றும் தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கடமை புரியும் கிராம சேவை, பொருளாதார மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக மட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

# மாளிகைக்காடு கடலரிப்பை தடுப்பதற்கு மண் மூடைகள்

(ஏ.எஸ்.மௌலானா)

மாளிகைக்காடு பிரதேசத்தில் கடலரிப்பைக் கட்டுப் படுத்துவதற்கு முதல் கட்டமாக மண்மூடைகள் போடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மாளிகைக்காடு பிரதேசத்தின் முழுக் கரையோரத்துக்கும் சுமார் 850 மண் மூடைகள் பாதுகாப்பு அணையாக அடுக்கப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மாளிகைக்காடு பிரதேசத்தில் உக்கிரமடைந்திருந்த கடலரிப்பு காரணமாக அங்குள்ள கலாசார மண்டபம் உட்பட பொதுக் கட்ட டங்கள் மற்றும் வாடிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், கரையோரம் பேணல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகாரிகளின் கவனத்துக்கு இப்பிரச்சினையை கொண்டு சென்று பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இதன் பயனாக அங்கு விஜயம் மேற்கொண்ட உயர்மட்ட அதிகாரிகள் குழு, கடலரிப்பைக் கட்டுப்படுத்த நிரந்தரத் தீர்வாக அலைத் தடுப்புச் சுவர் அமைப்பது என்று தீர்மானித்துள்ளனர். முதற்கட்டமாக மண் மூடையடுக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள் ளனர்.





# விபுலானந்தாவின் கல்விச் சுற்றுலா!

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மொன்டி சோரி மாணவர்கள் கடந்த (24) ஞாயிற் றுக்கிழமை கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

மொன்டிசோரி பணிப்பாளர், ஆசிரி யர்கள் தலைமையில் பெற்றோர்கள், மாணவர்கள் இந்தச் சுற்றுலாவில் பங் கேற்றனர்.

இவர்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மட் டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமம், பாசிக்குடா சிறுவர் பூங்கா, கலங்கரை விளக்கம், படகுச் சவாரியில் தனித்தீவு போன்ற இடங்க ளுக்கு விஜயம் செய்தனர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரர் ஆலயத் தலைவர் ரி.மேகராசா, முன்னாள் தவிசாளர் சிவஞானம் அகிலேஷ்வரன் ஆகியோர் மாணவர் களை வரவேற்றனர்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்தின் உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதா னந்தா ஜீ மகராஜ் சிறுவர்களுக்கு பஜனையுடன் கூடிய அருளுரை வழங் கினார்.

# சிறுவர் தின நிகழ்வுக்கு ஏற்பாடு

( வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச சிறுவர் தினத்தை முன் னிட்டு மனித அபிவிருத்தி ஸ்தாபனம் மலையகம் மற்றும் கிழக்கு மாகா ணங்களில் பரவலாக பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள் ளது.

‘அனைத்து சிறுவர்களையும் உள் வாங்கிக்கொள்’ என்ற 2023 ஆம் ஆண்டு சிறுவர்தின தொனிப் பொரு ளுக்கு அமைய மனித அபிவிருத்தி ஸ்தாபனம் பல்வேறு செயற்பாடுகளைக் கண்டி, நுவரெலியா, கேகாலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் பிரதான நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி நுவரெலியா மாவட் டத்தில் கொட்டகலை பிரதேசத்தில் நடைபெறவுள்ளது என்று தாபன இணைப்பாளர் பி.சிறிகாந்த் தெரி வித்தார்.

இது தொடர்பாக திட்டமிடல் கூட்டம் அண்மையில் மனித அபிவிருத்தி தாபனத்தின் கொட்டகலை அலுவலகத் தில் நடைபெற்றது.

இந்தச் செயற்பாட்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பிரதேச செயலகங்கள், பொது சுகாதாரத்துறையினர், தேசிய சிறுவர் அதிகார சபை, நன்னடத்தை அலகு, பொலிஸ், தோட்ட நிர்வாகங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை இணைத்து நடத்த திட்டமிட்டுள்ளனர்.



# இடிந்து விழும் நிலையில் காரைதீவு பெரிய பாலம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு அம்பாறை பிரதான வீதியில் காரைதீவுக்கும் மாவடிப்பள்ளிக் கும் இடையில் அமைந்திருக்கும் பெரிய பாலம் எந்த நேரத்திலும் இடிந்து விழக் கூடிய நிலையில் ஒரு வழிப்பாதையாகக் காணப்படுகிறது.

நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த இப்பாலம் அடிக்கடி தீந்தை பூசி பாலத்தில் காணப்படும் உடைவுகள் மறைக்கப்பட்டு வருகின்றது.

நாளாந்தம் பல்லாயிரக் கணக்கான மக்களும், கனரக வாகனங்களும் பய ணிக்கும் இப்பாலம் ஒருவழிப் பாதை யாகவே உள்ளது. சம்பந்தப்பட்ட அதி காரிகள் துரித கவனமெடுத்து இப் பாலத்தை சீர் செய்து தருமாறு இப் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

# ஈராக்கில் திருமண வைபவத்தில் பரவிய தீயில் சிக்கி 100 பேர் பலி!





ஈராக்கின் வட பகுதியில் திருமண வைபவமொன்றின் போது ஏற்பட்ட தீயில் சிக்கி குறைந்தது 100 பேர் உயிரிழந்துள்ளனர். 150 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ விபத்தில் புதுமணத் தம்பதியும் உயிரிழந்துள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈராக்கின் வடக்கே நினிவே மாகாணத்திலுள்ள அல் ஹம்டானியா மாவட்டத்திலேயே நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீ பரவியமைக்கான காரணம் கண்டறியப்படாத போதிலும், வாண வேடிக்கைக்காக பட்டாசுகள் பற்ற வைக்கும்போது இந்த விபத்து ஏற் பட்டது என ஆரம்பகட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருமண மண்டபத்திலிருந்த தீப் பற்றக்கூடிய படலங்கள், தீ பரவ உதவியிருக்கலாமென அந்நாட்டு பொலிஸாரை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# தீவிரம் அடையும் உக்ரைன் - ரஷ்யப் போர்: ஒரே இரவில் ஏவப்பட்ட 14 ஏவுகணைகள்!



உக்ரைன் ரஷ்யப் போரின் உக்கிரம் குறைவடைந்து செல்கின்றது. இந்த நிலையில் ரஷ்ய கட்டுப்பாட்டில் இருக்கும் உக்ரைனிய பகுதி மீது 14 முறை உக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது.

மேற்கத்திய நாடுகளுடன் உக்ரைனின் நெருக்கத்தை கண்டித்து கடந்த ஆண்டு பெப்ரவரி 24ம் திகதி ரஷ்யா உக்ரைன் மீது போர் தாக்குதலை தொடங்கியது.

இந்த போர் நடவடிக்கையின் தொடக்க கால கட்டங்களில் போர் தீவிரமாக நடைபெற தொடங்கிய போது ரஷ்ய ஆதரவாளர்கள் அதிகம் வசிக்கும் உக்ரைனின் கிழக்கு பகுதியில் உள்ள டொனெட்ஸ்க் பிராந்தியத்தை சுயமாக அறிவிக்கப்பட்ட டொனெட்ஸ்க் மக்கள் குடியரசு என ரஷ்யா அறிவித்தது.

இதற்கு உக்ரைன் மற்றும் பல்வேறு உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று மட்டும் டொனெட்ஸ்க் பிராந்தியத்தின் மீது உக்ரைன் 14 முறை தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலுக்கு உக்ரைன் 155 மில்லி மீற்றர் மற்றும் 152 மில்லி மீற்றர் காலிபர் பீரங்கி துப்பாக்கிகள் பயன்படுத்தியுள்ளது.

# மணிப்பூரில் மீண்டும் பதற்றம்: மாணவர்கள் சுட்டுக் கொலை!



மணிப்பூரில் கலவரத்தின் போது காணாமல் போன மெய்தி இனத்தைச் சேர்ந்த இரு மாணவர்களை குகி இனத்தைச் சேர்ந்த ஆயுதக் குழுக்கள் சுட்டுக் கொன்றுள்ளன என தெரிவிக்கப் படுகின்றது.

மணிப்பூரில் கடந்த மே மாதம் மெய்தி இன மக்களுக்கும், குகி இன மக்களுக்கும் இடையே மோதல் ஆரம்பித்து மிகப்பெரிய கலவரமாக மாறியுள்ளது. இந்த நிலையில் இதுவரை 200 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியதுடன் ஆயிரக்கணக்கானோர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இதற்கிடையே மெய்தி இன மக்களில் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்கள் பற்றிய விப ரங்கள் சமூக வலைத்தளங்களில் வெளி யிடப்பட்டதன் அடிப்படையில் சி.பி.ஐ. மற்றும் விசாரணைக்குழுவினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றார்கள்.

சுட்டுக் கொல்லப்பட்ட குறித்த மாண வர்களது புகைப்படங்களும் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டு இருந்தன. அவர்களுடைய நிலைமை என்னவானது என்று தெரியாமலிருந்தது. இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு அவர்கள் பற்றிய பரபரப்பு செய் திகள் சமூக வலைத்தளங்களில் பரவின.

இந்த மாணவர்களான 17 வயதான ஹிஜம் மற்றும் 20 வயதான பிஜம் ஆகியோர் முகாம் ஒன்றில் புல்வெளி தரையில் உட்கார வைத்து இருப்பது போன்ற காட்சியும், அவர்களுக்கு பின்னால் ஆயுதம் ஏந்தி சிலர் நிற்பது போன்ற காட்சியும் காணொளி மூலம் பரபரப்பாக பரவியது.

அதே காணொளியில் அடுத்த சில நிமிடங்களில் அந்த இரண்டு பேரும் சுட்டுக் கொல்லப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடப்பது போன்ற காட்சிகளும் இடம்பெற்று இருந்தது.

இந்த காணொளிக் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகின்ற நிலையில் மணிப்பூரில் மீண்டும் பதற்றம் உருவாகியிருக்கிறது.

மாணவர்கள் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கும் காட்சி பற்றி அரசு விசாரணை தொடங்கி உள்ளது. அந்த 2 பேரையும் குகி இனத்தைச் சேர்ந்த ஆயுதக்குழுக்கள் சுட்டு கொன்று இருப்பது தெரிய வந்துள்ளது.

இதுபற்றி அரசு அதிகாரி ஒருவர் கூறுகையில், கடந்த ஜூலை மாதம் அந்த 2 மாணவர், மாணவி காணாமல் போனது பற்றி விசாரணை நடத்தி வந்தோம்.

ஏற்கனவே அவர்கள் தொடர்பான வழக்கு சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அவர்கள் கொல்லப்பட்டது குறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என்று கூறினார்.

மற்றொரு அரசு உயர் அதிகாரி கூறுகையில், மாணவர், மாணவியைக் கொன்றவர்கள் மீது உறுதியான கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதேவேளை பொது மக்கள் அமைதிகாக்க வேண்டும் என்று மணிப்பூர் மாநில அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பஞ்சாப், ஹரியாணா, டில்லியில் 50 இடங்களில் தீவிர சோதனை!




இந்தியாவின் பஞ்சாப், ஹரியாணா, சில்லி, உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் தேசிய புலனாய்வு முகமை சோதனை நடத்தி வருகிறது.

காலிஸ்தான் பிரிவினைவாத குழுக்களுடன் தொடர்புடைய இடங் களைக் குறிவைத்து இந்த சோதனை நடைபெறுவதாகத் தகவல்கள் வந் துள்ளன.

பஞ்சாபில் 30 இடங்கள், ராஜஸ் தானில் 13 இடங்களில், ஹரியாணாவில் 4, உத்தராகண்டில் ஓரிடம் மற்றும் டெல்லி, உத்தரப் பிரதேசத்தில் சில இடங்கள் என மொத்தம் 50 இடங்களில் ஒரே நேரத்தில் சோதனை ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக என்.ஐ.ஏ. வட்டாரத் தில், வெளிநாட்டில் உள்ள காலிஸ்தான் போன்ற பிரிவினைவாத ஆதரவுக் குழுக்கள் சில இந்தியாவில் சிலரை அடையாளம் கண்டு ஹவாலா மூலமாக பணப் பரிவர்த்தனை செய்து போதைப் பொருட்கள், ஆயுதங்கள் வாங்க இங்குள்ள சிலரை ஊக்குவிப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அதன் நீட்சியாகவே இன்றைய சோதனை நடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பாடுமீன்களின் சமர் சமநிலையில் முடிப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு 'பாடுமீன்களின் சமர்' கிண்ணம் வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

மட்டக்களப்பின் போர் என வர்ணிக்கப்படும் "பாடு மீன்களின் சமர்" மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரிக்கும், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரிக்கும் இடையில் இன்று (27) காலை மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரபல பாடசாலைகளான மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரிக்கும், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரிக்கும் இடையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த கிரிக்கெட் சமரானது கடந்த 4 வருடங்களாக இடம்பெறாத நிலையில் இம்முறை 10ஆவது தடவையாக நடத்தப்பட்டது.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி, 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களைச் சேர்த்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மத்திய கல்லூரி, 2 விக்கட்டுகளை இழந்து 28 ஓட்டங்களுடன் ஆடிக் கொண்டிருந்தபோது, மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு, 'பாடு மீன்களின் சமர்' வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிக்கப்பட்டது.

இதன்மூலம் இரு கல்லூரிகளும் 2023ஆம் ஆண்டின் இணை சம்பியன்களாக அறிவிக்கப்பட்டன.

போட்டியின் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண மற்றும் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அதேவேளை, மட்டக்களப்பு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரும் கலந்துகொண்டார்.









